[1978 மார்ச் 28

Pandian Roadways Corporation Buses.

*696 Q.—Thiru N SUNDARARAJ: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal with the Government to stop the practice of the drivers in the Pandian Roadways Corporation, writing invoice in the buses, which causes great hardship to the passengers; and

(b) if so, when will it be implemented?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் தவிர மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் இதுபோன்ற ஒரு முறை இல்லை. இந்த முறையின் மூலம், ஒன்று அங்கிருக்கிற கண்டக்டரின்மேல் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லை என்று பொருள்படுகிறது. இரண்டாவது, அதே நேரத்திலே இந்த டிரைவர் எழுதும்போது ஏதாவது தவறு ஏற்படுமானால் அவருடைய சிந்தனை பூராவும் அதிலே இருந்து விபத்துக்கள் ஏற்படலாம்.

மூன்றாவது, சர்க்கார் பேருந்துக்கும், தனியார் பேருந்துக்கும் இருக்கக்கூடிய போட்டியில், சர்க்கார் பேருந்தில் இத்தகைய முறை இருப்பதன் காரணமாக, ஒரு குறிப்பிட்ட 25 மைல் தூரத்தை தனியார் பேருந்து ஒரு மணி நேரத்தில் கடக்க எடுத்துக் கொண்டால், சர்க்கார் பேருந்து அந்தத் தூரத்தைக் கடக்க ஒன்றரை மணி நேரமாகிறது. இதனால், பிரயாணிகள் சர்க்கார் பேருந்தைத் தவிர்த்து, தனியார் பேருந்துகளில் செல்கின்றனர் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே, இந்த அநாகரிகமான முறையை நீக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும் ஓட்டுநர் இந்தக் குறையை நீக்க வேண்டுமென்று இதுவரை கூறவில்லை. செம்மையாக இந்த முறை அங்கு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. நடத்துனரின் மேலுள்ள ஐயப்பாட்டின் காரணமாக இந்த முறை நீடிக்கப்படவில்லை. இதனால், பயணிகளுக்கும் பலன் ஏற்படுகிறது. ஓட்டுநரிடம் இந்தக் குறிப்பு இருக்குமானால், அவருக்கு எந்தெந்த இடத்தில்

இந்தப் பயணிகளை இறக்கிவிட வேண்டுமென்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே தான் இந்த முறை தொடர்ந்து இருந்து வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற இந்த முறையை நீக்க வேண்டுமென்று இந்தத் துறை அலுவலர்களிடமிருந்து குறிப்பு எதுவும் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, பஸ்ஸில் எல்லோரும் ஏறி உட்கார்ந்த உடனே, ஓட்டுநரும் கண்டக்டரும், ஒருவரும் பேசக்கூடாது; பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டு எழுதக் கூடிய நிலையிருக்கிறது. அப்போது யாரும் பேசாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலைமை இல்லை. அப்படி ஒரு நிலைமை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கூறியதுபோல், விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே இந்த அரசு போக்குவரத்துக் கழகங்களிலே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் இந்த முறை இருக்கிறது. இந்த இன்வாய்ஸை எழுதுவதற்காக டிரைவர் ஒவ்வொரு அவுட்டரிலும் 5, 10 நிமிஷங்கள் வண்டியை நிறுத்த வேண்டியிருக்கிறது. பின்னால், அதைச் சரிக்கட்ட வேகமாக வண்டியை ஓட்டுவதால், ஆக்சிடெண்ட் ஏற்படுகிறது. ஆகவே, இந்த கண்டக்டர் சொல்லி, டிரைவர் எழுதுவதிலே சிரமம் இருக்கிறது ; பிரயாணிகளுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. எனவே, இதை உடனடியாக நீக்குவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முறையினால் டிரைவர் பலன் பெற முடிகிறது. இந்த இன்வாய்ஸ் முறையை நீக்கி, கண்டக்டரே எழுதுவது என்று சொன்னால், ஓட்டுநர் அந்தப் பலனைப் பெற முடியாமல் போக வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.